## மே – 01 – திங்கள்

தொழிலாளரது பாதுகாவலர் - புனித யோசேப்பு

**“கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கு ஏற்றசெயல்’’ (யோவா:6:29)**

### முதல் வாசகம் : தொடக்க நூல் 1 : 26 --- 2 : 3

அப்பொழுது கடவுள், ”மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம். அவர்கள் கடல் மீன்களையும், வானத்துப் பறவைகளையும், கால்நடைகளையும், மண்ணுலகு முழுவதையும், நிலத்தில் ஊர்வன யாவற்றையும் ஆளட்டும்” என்றார். கடவுள் தம் உருவில் மானிடரைப் படைத்தார் கடவுளின் உருவிலேயே அவர்களைப் படைத்தார் ஆணும் பெண்ணுமாக அவர்களைப் படைத்தார். கடவுள் அவர்களுக்கு ஆசி வழங்கி, ”பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள் அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள் கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்” என்றார். அப்பொழுது கடவுள், ”மண்ணுலகெங்கும் உள்ள விதை தரும் செடிகள், பழமரங்கள், அனைத்தையும் உங்களுக்கு நான் கொடுத்துள்ளேன் இவை உங்களுக்கு உணவாகட்டும். எல்லாக் காட்டுவிலங்குகள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்வன ஆகிய அனைத்து உயிரினங்களுக்கும் பசுமையான செடிகள் அனைத்தையும் நான் உணவாகத் தந்துள்ளேன்” என்றார். அது அவ்வாறே ஆயிற்று. கடவுள் தாம் உருவாக்கிய அனைத்தையும் நோக்கினார். அவை மிகவும் நன்றாய் இருந்தன. மாலையும் காலையும் நிறைவுற்று ஆறாம் நாள் முடிந்தது. விண்ணுலகும் மண்ணுலகும் அவற்றில் உள்ள அமைப்புகள் அனைத்தும் உருவாக்கப் பெற்று நிறைவெய்தின. மேலும் கடவுள் தாம் செய்த வேலையை ஏழாம் நாளில் முடித்திருந்தார். அவர் தாம் செய்த வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். கடவுள் ஏழாம் நாளுக்கு ஆசிவழங்கி, அதைப் புனிதப்படுத்தினார். ஏனெனில் கடவுள் நாம் செய்த படைப்பு வேலைகள் அனைத்தையும் நிறைவு பெறச்செய்து அந்நாளில்தான் ஓய்ந்திருந்தார்.

**பதில்பாடல்:** ஆண்டவரே நாங்கள் செய்பவற்றில் வெற்றி அருளும்

### நற்செய்தி : மத்தேயு 13 : 54 – 58

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்து அங்குள்ள தொழுகைக் கூடத்தில் அவர்களுக்குக் கற்பித்தார். அதைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்கள், ”எங்கிருந்து இந்த ஞானம் இவருக்கு வந்தது? எப்படி இந்த வல்ல செயல்களைச் செய்கிறார்? இவர் தச்சருடைய மகன் அல்லவா? இவருடைய தாய் மரியா என்பவர்தானே? யாக்கோப்பு, யோசேப்பு, சீமோன், யூதா ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் எல்லாரும் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? பின் இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன?” என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயங்கி னார்கள். இயேசு அவர்களிடம், ”தம் சொந்த ஊரிலும் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப்பெறுவர்” என்றார். அவர்களுக்கு நம்பிக்கை இல்லாததால் அவர் அங்குப் பல வல்ல செயல்களைச் செய்யவில்லை.

**தியானம்:** இன்று தொழிலாளர்களின் தினம். தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித யோசேப்பின் விழாவை இன்று திருச்சபை கொண்டாடுகின்றது. தமது கடின உழைப்பால் வருவாய் தேடி தங்கள் குடும்பங்களின் தேவைகளை நிறைவேற்றும் அனைவருக்கும் புனித யோசேப்பு எம் முன்மாதிரிகை. நாம் செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் உண்மையான, நேர்மையான உழைப்பால் அதை மேன்மைப் படுத்தவும், அதேவேளையில் இவ்வுவலக தேவைகளுக்கு உழைப்பதோடு மட்டும் நின்றுவிடாது, நிலைவாழ்வை நோக்கிய எமது பயணத்தில் உழைக்க வேண்டும் என்பதும், கடவுளின் விருப்பமாகவும் உள்ளது. அதற்காகவே தம் ஒரேபேறான மகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். அழிந்து போகும் உணவிற்காக உழைக்க வேண்டாம், நிலைவாழ்வு தரும் அழியாத உணவிற்காக உழையுங்கள்’’ (யோவா.6:27) என தன்னைத் தேடிவந்த மக்களுக்கு இசே கூறுகின்றார். மனிதர்களின் அடிப்படைத் தேவைகளுள் முக்கியமானது உணவு. ஆனாலும் உணவைத் தேடுவதோடு மனிதன் நின்றுவிட்டால் ஒருநாளும் உன்னத நிலையை அடையமாட்டான். இதைத்தான் இயேசு கூறுகின்றார். ஒவ்வொரு மனிதனும் நிலைவாழ்வைப்பெற்று வாழவேண்டும் என்பதுதான் கடவுளின் விருப்பம். வாழ்வு தரும் உணவு நானே என்று கூறிய இயேசு உலகம் வாழ தம்மையே கையளிக்கின்றார். “கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கேற்ற செயல்’’ (யோவா.6:29) அதற்கமைவாக நமது மனநிலை இயேசுவின் மனநிலைக்கு ஒத்ததாகவும், நமது மதிப்பீடுகள் இயேசுவின் மதிப்பீடுகளாகவும் நமது கண்ணோட்டங்களாகவும் மாறவேண்டும். அப்பொழுதுதான் நிலைவாழ்வு பெறத்தகுதியுள்ளவர்கள் என நம்மைக் கருத முடியும்.